குயில்

பதிவெண்: எம். 7030.

கிழமை இதழ்

ஆசிரியர்:

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 16-9-58 செவ்வாய் | இசை: 16

BHARATHI PUTHAKA NILAYAM MADURAI

விடுதலைப்பாட்டு

தமிழருக்கு மறவர் என்று பேர்

நாயும் ஒப்பாத அடிமை வாழ்வை
நாலு கோடித் தமிழரா ஒப்புவர்?

தாய்நாட் டிற்குத் தமிழர்நா டென்றுபேர்;
தமிழ ருக்கே மறவர் என்றுபேர்! (நாயும் ஒப்பாத)

தேய்தல் வளர்தல் திங்கள் வழக்கம்
தேயாப் புகழ்செயல் எங்கள் வழக்கம்!
தாய கத்தின் மீட்சிப் போரினில்
சாவும், தமிழர்க் கமிழ்தாய் இனிக்கும்! (நாயும் ஒப்பாத)

வீரம் பிறந்த நாட்டிற் பிறந்தவர்;
வெற்றித் தமிழர்; உலகிற் சிறந்தவர்;
ஆரியர் அல்லர்; மறைந்தி ருந்தே
அம்பு பாய்ச்சும் பூரியர் அல்லர் (நாயும் ஒப்பாத)

குறைஒன்று தாயகம் கொள்ளவும் பாரோம்
குன்று பெயரினும் உள்ளுரம் தீரோம்
சிறையும் நோயும் கட்டிலும் தென்றலும்!
செந்நீர் சிந்தல் தேன்சிந்து பாடல்! (நாயும் ஒப்பாத)

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

தாரம்

தாரம், அரும்பண்டம், வெள்ளி, அதன்ஒளி
சேரும்ஏழ் நரம்பில் ஓர்நரம்பும் செப்பும்
என்பது திவாகரம்.

இதில், தாரம் என்பதற்கு நான்கு பொருள் காணப்படுவது காண்க.

வல்லிசைப் பெயரும், வாழ்க்கைத் துணேவியும்
யாழின் நரம்பும் அரும்பண்டமும்,
தராவும்; நாவும், தாரம் என்ப. [வெண்தாதும்,

என்பது பிங்கலந்தை.

இதில் தாரம் என்பதற்கு, ஏழுபொருள் காணப்படுவது காண்க.

தாரம், வல்லிசை நா,வெள்ளி,
தலைவி ஓரிசை, கண், என்ப.

என்பது சூடாமணி நிகண்டு. இதில் கண் என்பதும் குறிக்கப்படுவது காண்க.

தாரம் என்ற இச்சொல் வடமொழியே என்று சொல்லுகின்றவர்கள் அதற்கு எடுத்துக் காட்டாக என்ன சொல்லுகின்ருர்கள் எனில், தாரம் ஏழிசையின் ஒன்று என்ற பொருள் வடமொழியில்தான் உண்டு என்கின்ருர்கள். அரும்பண்டம் முதலிய பொருள் தரும்போது அது தமிழ்ச்சொல்லே என்பதை அவர்களே ஒத்துக்கொள்ளுகின்றனர்.

நாம் கேட்கின்ருேம், ஏழிசையில் ஒன்றைக் குறிக்கின்றபோது அது வடசொல் என்ருல், ஏழிசை வடவர்க்கு எப்போது எங்கிருந்து கிடைத்தது?-ஏழிசை தமிழரிடமிருந்து வடவர் எடுத்தனர் என்பது மறுக்கக் கூடியதா? இல்லவேயில்லை. ஆதலின் ஏழிசையின் ஒன்றுக்கு அமைந்த தாரம் என்பதையும் வடவர் தமிழினின்றே எடுத்தனர் அல்லவோ?

இனி,

அரும்பண்டம், ஏழிசையின் ஒன்று ஆகிய இரு பொருளிலும் வரும் தாரம் செந்தமிழ்ச் செல்வமே. ஆனால், நிகண்டு பிங்கலம் முதலியவற்றில் பிற பொருளில் வரும், தாரம் என்ன மொழி? எனில், கூறுவோம்.

தாரம் என்பதை வடவர், வல்லோசையானும், மெல்லோசையானும் சொல்லிக்கொண்டனர். ஆயினும் முதல் தாரம் என்பதுதான். அது ஆகுபெயர் முதலியசார்புப்பொருள் பெற்று வந்திருக்கலாம். அவையும் தமிழரால் வந்தனவே என்று உணர்தல் வேண்டும்.

எனவே, தாரம் என்பது தூய தமிழ்ச் சொல் என முடிக்க.

இனியும், இசை இலக்கணம்-தமிழினின்றே வடவர் எடுத்தார்கள் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

க. இன்றைக்கு ஆயிரத்து நானூறு யாண்டின்முன் வடமொழியில் இசை நூல் இயற்றிய பரதரும், அறுநூற்றெண்பதுயாண்டின்முன் இசை நூல் இயற்றிய சாரங்கதேவரும் தமிழிசையிலிருந்து எடுத்தே வடமொழிக்கண் இசை வகுக்கப்பட்டது எனக் கூறினுர் என்பர் இவ்வாராய்ச்சிவல்ல விருதைச் சிவஞான யோகிகள்.

உ. இசைத் தமிழிலிருந்தே எல்லா இசை வகைகளும் வடமொழிக்கண் சென்ற உண்மை ஆபிரகாம் பண்டிதர் மிக விரிவாக இயற்றி வெளியிட்ட கருணுமிர்த சாகரம் என்னும் இசைத்தமிழ் நூலில் நன்கு விளக்கிக் காட்டப் பட்டிருக்கின்றது.

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8--50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 0–15 (பதினைந்து காசு) தபால் தலைகள் அனுப்புக.

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௮௯ ஆவணி ௩௧.

இராசாசி வயிற்றெரிச்சல்

உம்நாடகம் செல்லுமா நரியாரே?

சென்னை விலங்கு மருத்துவம் செய்முறைக்
கல்லூரி யின்தமிழ்க் கழகந் தன்னைத்
தொடக்கம் செய்த இராசாசி சொன்னார்:
"வெறுங்கூச்ச லிடுவதால் சாதிவேர் அறாது"

பெரியார் தாமும், பெரியார் கொள்கைக்
குரியார் தாமும், சாதிக் கொள்ளைநோய்
ஒழிக்கும் பணியில் ஓய்விலா துழைப்பது
வையம் அறியும்! மறுக்க ஒண்ணாது!
வெறுங்கூச்ச லிடுவதாய் இராசாசி விளம்பினால்
ஆரைப் பற்றி விளம்பிய தாகும்?

வெல்லும் பெரியார் வெறும்பேச்சுக் காரரா?
வீரத் தமிழர் வெறும்பேச்சுக் காரரா?

முன்னாள் நீர்ஓர் முதல மைச்சராய்
இருந்தீர் இந்தியைக் கொண்டு வந்தீர்!
உமது வாலை ஒட்ட அறுத்தது
பெரியார் வெறும்பேச்சுத் தானா? பேசுக
அமைச்சுக் கட்டிலும் அரோகரா ஆனதே,
பெரியார் வெறும்பேச்சுக் கீரரா? பேசுக;

சாதி கனவிலும் தலைகாட் டாமல்
காதிலும் சாதிக் கதைகே ளாமல்
ஒழிக்கப் படுவதை உணர எண்ணினால்
விழிக்குக் கறுப்புக் கண்ணாடி வேண்டாம்!

ஒருவர்மேல் ஒருவர் அன்புவைத் தால்தான்
ஒழியும் சாதி வெறுப்பால் ஒழியாது"

அடியோடு மரத்தை அகற்ற எண்ணுவோன்
ஆணி வேர்மேல் அன்புவைப் பானோ!
வன்பு மிக்க சோறுவிற் பான்மேல்
அன்பு வைத்த பெரியார் அறிவுரை
என்ன யிற்று? நன்று கருதுக!
பார்ப்பான் என்ற பேர்ப்பல கைதான்
போனதா புகலுக! இல்லையே! இல்லையே!

ஆயிரம் தமிழர், அன்புப் போரில்
புழுவாய்த் துடித்தனர், போனதா பலகை?

எப்போது பலகை எடுக்கப் பட்டது?
தப்பேது மின்றி எண்ணுக சற்றே!
விரிவாய்ப் படித்ததாய் விளம்பி நிற்பீர்
பெரிய அலுவல் பார்த்ததாய்ப் பேசுவீர்
ஆண்டில் முதுமை அடைந்தேன் என்பீர்

"மக்கள் நிகர்" எனும் மிக்க சிறிய
பாடமும் அறியாக் குள்ள
நாடகம் செல்லு மோநரி யாரே?

அமைச்சர் பத்தவச்சலனார்!

"தென்னாட் டார்கள் வடநாடு சென்றே
பிச்சை எடுக்கின் றார்கள், பிச்சையும்
நிறையக் கிடைத்திடு கின்ற" தென்றே
அமைச்சர் பத்த வச்சலம் அறைந்தார்;
தமிழர் அரிசியைக் கேரளம் தள்ளும்
மதியிலார் நாண மில்லார்
இதுவும் சொல்வார் எதுவும் சொல்வரே!

* * *

(முன்இதழ்த் தொடர்ச்சி)

கீரைகள்

★ "சித்தன்" ★

சிறுபசலை இன்பத்தைச் சிறக்க நல்கும்;
தீர்க்கும்நீர் வேட்கையனல்: மலமி ளக்கும்!
சிறுகீரை மருந்துகளின் வீறு தீர்க்கும்;
திருசேர்க்கும்; கண்காக்கும்; காசம், பித்தம்
அறுமிதனால்! ஆரையினால் பயித்தி யம்போம்;
அதிசுவையாம்; நீரிழிவை அகற்ற நன்றாம்!
அறுகீரை தாதருளும்: பிணியுற் றோர்கட்
கருங்கறியாம்; கபம்சன்னி, காய்ச்சல் போக்கும்!

முருங்கையிலை நெய்யோடுண்–முருக னவாய;
மூர்ச்சையொடு கண்ணோய்கள் வெம்மை போகும்!
பெருஞ்சுவையின் முளைக்கீரை பசிஉண் டாக்கும்;
பித்தநோய், சொறி, சிரங்கு, சுரகா சம்போம்;
குருதிபெறும் கொதிப்பாற்றும்: கண்து லங்கும்!
கொடிப்பசலை குருதியொடு வலிமை தேக்கும்!
கருவேம்பின் இலை,இரைப்பைக் குறுதி சேர்த்துக்
கடியபல நோய்போக்கும்! கருத்திற் கொள்க!

கீரைகளில் சத்துக்கள் நிறைய உண்டு!
கிளர்ஒளியின் உடம்பருளும்; குடரில் நாளுஞ்
சேருகழி பொருளனைத்தும் வெளியிற் றள்ளும்;
தேடியொரு கீரைநிதம் தின்னல் நன்றாம்!
கீரைபல பிணிதீர்க்கும் மருந்து மாகும்!
கிடைப்பதுவோ எளிதில்;மிகு செலவு மில்லை!
கீரைகளைப் புதிதாகக் கொள்க! கொள்ளின்
கிடைக்குமுயிர்ச் சத்துக்கள்! கீரை வாழி!

★ ★ ★

புதுவை-திராவிடர்கழகப் பொதுக்கூட்டம்.

கொடியேற்றுவிழா

31-8-58 ஞாயிறு காலை 10–மணிக்குப் புதுவை தி. க. இல்லத்தில் புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களால் கொடியேற்றி வைக்கப்பட்டது. அதுபோது கவிஞர் அவர்களுக்குப் புதுவை கழகத்தின் சார்பாகத் தேனீர் அளிக்கப்பட்டு மலர்மாலை சூட்டப்பட்டது.

பின்னர் கவிஞர் அவர்கள் கழக உறுப்பினர் கூட்டத்தில் பேசுகையில், உலகத்திலே தலை சிறந்த கொள்கையை வைத்திருப்பது திராவிடர் கழகம் ஒன்றுதான் அதில் யாவரும் சேர்ந்து ஒத்துழைப்பதுடன் கழகப் பணிகளை மேன்மேலும் உயர்த்தவேண்டும் என்று குறிப்பிட்டார்.

அடுத்து, திராவிடர்கழகமத்தியக்குழுத் தலைவர் திரு, தி. பொ. வேதாசலம் அவர்கள்கழகக்கொள்கைகளை விளக்கிப் பேசினார்கள்.

நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தோழர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இறுதியில் புதுவை தி. க. துணைச் செயலாளர் வலங்கை கலைமணி நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

பொதுக்கூட்டம் :-

மாலை 6-மணிக்கு ஒதியஞ் சாலைத்திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

புரட்சிக்கவிஞர், பாரதிதாசன் தலைமை வகித்தார். வழக்கறிஞர் தி. பொ. வேதாசலம், திருவாரூர் திருமதி சுந்தரலீலா அம்மையார் ஆகியோர் பேசினார்கள். தோழர் பொக்கிஷம் நன்றிகூறக்கூட்டம் சிறப்புடன் முடிவுற்றது.

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

நாடகத்துள் நாடகம் (தொடர்ச்சி)

நிலைமை: *ஆடிப்பாடியிருந்த சிறுமியர், அங்குமிங்கும் ஓடுகின்றார்கள்.*

ஒருபுறம் குரங்கு விளாம்பழம் பறித்துப்போடுகிறது அதைநோக்கிக் கையேந்தி நிற்கின்றார்கள் சிறுமியர் சிலர். பச்சைக்கிளி நெல்லி மரத்தில் ஏறிக் கிளைமுறிந்ததால் அங்கிருந்த சேற்றில் விழுகின்றாள்.

ஒருத்தி- ஐயோ! மேலெல்லாம் சேருகி விட்டதே.

மற்றொருத்தி- எழுந்திரு! குளித்துவிடு! ஆடையை நனைத்துப் பிழிந்துவிடு.

(பச்சைக்கிளி குளிக்கின்றாள். தன் குடத்தைக் குளத்தில் கவிழ்த்து அந்தத் தெப்பத்தின் உதவியால் நடுக்குளத்தில் நீந்திவிளையாடுகின்றாள்.)

ஒருத்தி- கரடி!

(கரையிலிருந்தவர்கள் வேறுபுறமாக ஓடிவிடுகின்றார்கள், பச்சைக்கிளி நடுக் குளத்தைவிட்டுக் கரைதிரும்ப முடியவில்லை. கரடி குளத்தின் ஓரம் அணுகுகின்றது.)

பச்சைக்கிளி- ஐயோ குளத்திலும் இறங்க வருகின்றதே எல்லாரும் எங்கே போய்விட்டீர்கள்?

(இதற்குள் ஓடிவந்த தூயன் என்ற இளைஞன் கல் ஒன்றைத் தூக்கி-மரத்தின்மேல்ஏறி நின்றபடி கரடிமேல் விட்டெறியக் கரடி ஓடிவிடுகின்றது.)

பச்சைக்கிளி- தொலைந்துவிட்டதா? திரும்பி வருமா?

தூயன்- ஏன் இத்தனை வெறுப்பு?

பச்சைக்கிளி- விரும்பச் சொல்லுகிறீர்களா?

தூயன்- வேறென்ன?

பச்சைக்கிளி- என்னைப் பிடிக்க வரவில்லையா அது?

தூயன்: எப்படித் தெரிந்து கொண்டாய் அதை.

பச்சைக்கிளி: என்னை நோக்கித் தானே குளத்தில் இறங்கப் பார்த்தது?

தூயன்: அப்படி உன் மனம் குழப்பம் அடைந்தது.

பச்சைக்கிளி: சரி! அதை விரும்பச் சொன்னீர்களே ஏன்?

தூயன்: தண்ணீர் குடிக்கக் குளத்தில் இறங்கியது. அதன் விருப்பத்தைத் தடுத்தேன் நான்! அவ்வாறு செய்தும் என்னையும்உன்னையும் அது மன்னித்தது. ஊறு செய்தவர்களை விலங்குகள் மன்னிப்பது அரிது!

பச்சைக்கிளி: அது எதிர்த்திருந்தால்...!

தூயன்: அஞ்சி ஓடியிருப்பேன் ஓடுவதால் எனக்குத் துன்பம் ஏற்பட்டிராது! நான் ஓடிய பின் உன் நிலை என்னாகுமோ என்று எண்ணித் துன்படைய நேர்ந்திருக்கும்...

பச்சைக்கிளி: அப்படியா?... ஆம் மெய்தான். இப்போது நீங்கள் வராதிருந்தால்...!

தூயன்: நான் வராதிருந்தால் எனக்குத் தொல்லை ஏற்பட்டிராது.

பச்சைக்கிளி: என்ன தொல்லை உங்களுக்கு!

தூயன்: உன்னைவிட்டுப் பிரியவேண்டுமே இப்போது?

பச்சைக்கிளி: கரடிவராது. நீங்கள்போகலாம்.

தூயன்: கரடி வராது! உன்னிடம் சென்ற மனமும் வரமாட்டேன் என்கிறது.

பச்சைக்கிளி: அதற்கு நான் என்ன செய்வது?

தூயன்: சொன்னால் செய்கின்றாயா? உன் பெயர் என்ன?

பச்சைக்கிளி: பச்சைக்கிளி!

தூயன்: பச்சைக்கிளியே சொன்னால் செய்கின்றாயா? — உன் மனத்தை என்னிடம் அனுப்பு!

பச்சைக்கிளி: அப்படி என்றால் என்ன?

தூயன்: எனக்கு உன்மேல் ஆசை! உனக்கு என்மேல் ஆசைதானே.

பச்சைக்கிளி: கரடியிடமிருந்து காத்ததற்காக.

தூயன்: நன்றி செலுத்துகிறாயா?

பச்சைக்கிளி: ஆமாம்.

(உடையைப் பிழிந்து உடுத்துக் கொண்டாள்)

தூயன்: ஆசை வைத்தேன் உன்மேலே அப்படிச் செய் நீ என்மேலே.

பச்சைக்கிளி: பின்னே ஆசை வைக்காமலா இருக்கிறேன்!

தூயன்: பேசிக்கொண்டே போகலாம்.

பச்சைக்கிளி: கரடி வராது! நான் போகிறேனே!

தூயன்: ஆசை வைத்த நீ இப்படியா பேசுவது?

பச்சைக்கிளி: கூடவே வரவேண்டுமா?

தூயன்: பின்னென்ன?

(போகிறார்கள்)

வழியில்:

பச்சைக்கிளி– என்னை எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பார்கள் அம்மா அப்பா!

தூயன்– இவர் யார் என்று கேட்டால் என்ன சொல்லுவாய்.

பச்சைக்கிளி– உங்களையா? கரடியிடமிருந்து இவர்தாம் காப்பாற்றினார் என்று சொல்லுவேன்.

தூயன்– ஏன் கூட வருகிறார் என்று கேட்டால்?

பச்சைக்கிளி– இவருக்கு என்மேல் ஆசை என்று சொல்லுவேன்.

தூயன்– வருத்தப்படுவார்களோ என்னமோ!

பச்சைக்கிளி– வருத்தப்பட மாட்டார்களே!

தூயன்– என்னையும் இங்கே இரு என்று சொல்லுவார்களா?

பச்சைக்கிளி– ஏன் — உங்களுக்கு வீடு இல்லையா?

தூயன்– நீயும் நானும் திருமணம் செய்து கொள்ள ஒப்புவார்களா என்றேன்.

பச்சைக்கிளி– என்னமோ தெரியவில்லையே?

தூயன்: என்னை நீ மணந்து கொள்ளுகிறாயா?

பச்சைக்கிளி: என்னமோ தெரியவில்லையே.

தூயன்: அட! என்மேல் ஆசை என்று சொன்னாயே!

பச்சைக்கிளி: ஆசைதானா திருமணம்.

தூயன்: பின்னென்ன?

பச்சைக்கிளி: என் பெற்றோர்களைக்கேட்டுத் தான் சொல்ல வேண்டும். எனக்கொன்றும் புரியவில்லை.

வீடு

தாய்: இவர் யார் அம்மா? – ஏன் இத்தனை நேரம்? உன்னோடு வந்த பெண்கள் எல்லோரும் முன்பே வந்து விட்டார்களே!

பச்சைக்கிளி: என்னை அவர்கள் விட்டுவிட்டு ஓடி வந்துவிட்டார்கள். கரடியிடமிருந்து இவர் தாம் என்னைக் காப்பாற்றினர்.

தாய்: அப்படியா? நீ யார் தம்பி?

பச்சைக்கிளி: அவருக்கு வீடு இல்லையாம் அவர் இங்கேயே இருக்கட்டுமே அம்மா!

(தாய் முகத்தைத் தூயன் நோக்கு கின்றன்)

தூயன்: நான் இருப்பது சோழநாடு. பாண்டிய நாட்டின் அழகு பார்க்க வந்தேன். தோப்புக்குச் சென்றேன். கரடி வந்ததால் மற்றப் பெண்கள் ஓடிவிட்டார்கள். தனியாய் இருந்த பச்சைக்கிளியைக் காப்பாற்றி அழைத்து வந்தேன். இங்குச் சிலநாள் தங்கிப்போகலாம் என்பது என் விருப்பம். உங்கள் ஒப்புதல் எப்படியோ!

தாய்: நன்று! - இங்கேயே தங்கியிரு! ஊரையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டுப் போ! தம்பி கையலம்பிச் சாப்பிடு! (தொடரும்)

சாதி ஒழிப்புத் திருமணம்

மண்ணச்சநல்லூர் 'குயில்' விற்பனையாளர், தோழர் க. பெரியசாமி அவர்கட்கும் தோழியர் சரோசா அவர்கட்கும் 14–9–58 ஞாயிறு காலை 9 மணி அளவில் ஷியூர் தி. க. தலைவர் அ. பெருமாள் அவர்கள் இல்லில் திருந்திய திருமணம் நடைபெற்றது. அதுபோது திருச்சி, வழக்கறிஞர் தி. பொ. வேதாசலம் B. A. அவர்கள் தலைமை வகிக்க, சே. மு. அ. பாலசுப்பிரமணியம், அவர்களும் ஈரோடு எம். சுப்பையா, கு. மணிமொழி, ம. ப. ஆறுமுகம் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர்.

அத் திருமணத்தில் கழகத் தோழர்களும் பெருவாரியாக வந்து கலந்துகொண்டனர்.

பொன்னின் உருக்கு நீ!

கடலூர், வீ. கு. ஜீவா.

எடுப்பு

ஆசை முகம்காண விழிகள் விழியாமோ–உன்
அன்புமொழி கேளாச் செவிகள் செவியாமோ!

உடனெடுப்பு

வாசமிகும் வன்ன மலரே நீயங்கே
வாழுகின்றாய் இன்பம் எனக்கே திங்கே?
(ஆசை)

அடிகள்

பொன்னின் உருக்குநீ பூத்த குளமாவாய்
தென்னன் சிலையுந்நீ சிந்தை நிலையாவாய்
கலையின் பெருக்குநீ கண்ணின் ஒளியும்நீ
மலைத்தேன் பெருக்காம்,என் மனம்விரும்பும்
[உனது (ஆசை)

நெஞ்சோடு நெஞ்சம் கலந்தான பின்னே
நீயன்றி வேறு நினைவேது கண்ணே
குறும்புமொழிப் பேச்சும் கூர்விழி வீச்சும்
அரும்புச் சிரிப்பும்,என அரசோச்சும், உனது
(ஆசை)

கண்ணையிழந்தாலும்கோடிப் பொன்னையிழந்தாலும்
[வாழ்வேன்
உன்னையிழந்தால் ஒருபோதும் உயிர் வாழேன்
கன்னல் தமிழ்மீதாணை கனிந்த காதல்மீதாணை
கற்றகல்வி மீதாணை கட்டழகி உன்மீதாணை
(ஆசை)

அறம்சிறக்கும், தமிழ் அன்பு சுரக்கும்–கவி
அத்தனையிலும் புரட்சி எண்ணம் பிறக்கும்,–என்
உயிர்வளர்க்கும் நெஞ்சில் உரம் வளர்க்கும்
புரட்சிக்கவி பாரதி தாசன் கவிமீதாணை
(ஆசை)

விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு:

முழுப்பக்கத்திற்கு ரூ. 100
அரைப்பக்கத்திற்கு ரூ. 50
கால் பக்கத்திற்கு ரூ. 30

நீண்ட கால விளம்பரத்திற்கும், குறைந்த அளவு விளம்பரத்திற்கும் எழுதுக.

— அமைச்சர்.

ஒன்று மட்டும் உண்டு!

○ சென்னை, சுந்தரவடிவேலன். ○

போர்முடிந்து இன்னும் இரண்டு திங்கள்கூட ஆகவில்லை! இதற்குள்ளாகவா வாளுக்கும் வேலுக்கும் வாய்ப்பு கிடைத்தவிட்டது? அத்தான்! அடிக்கடி உங்களைப் பிரிந்து என்னைத் துன்பப்படும்படிச் செய்கிறார்களே, அவர்கள் எந்த நாட்டவர்கள்? சொல்லுங்கள் அத்தான்! நானும் உங்களுடன் சேர்ந்து வாள்பிடித்துத் தாள்பணிய வைக்கிறேன் அந்தப்புல்லர்களை! இனி நமக்குப் போர்க்களம் நோக்கிச் செல்லும் வேலையே இல்லாமல் செய்து விடுகிறேன். என்ன சொல்லுகிறீர்கள்?

கண்ணே! உன் கண்களிலே இருந்து கிளம்பும் கனல், உன் பேச்சிலே இருக்கும் வீரம் — என் உடலிலே வீர உணர்ச்சியை ஏற்றுகிறது! போர்க்களத்திலே பெண்களும் வாள்பிடித்து வேல்தாங்கிப் போரிடும்போது உன்னையும் அழைக்கிறேன்! அப்பொழுது வா! இப்பொழுது வாய்ப்பில்லை! "சென்று வா!" என்று விடைதந்தால் போதும்! அதோ! போர்முரசம் கேட்கிறது! பாண்டியநாட்டுப் படை புலியெனக் கிளம்புகிறது! வாள்பிடித்துப் போராட என்கை துடிக்கிறது! சென்று வரட்டுமா? விடைகொடு, கண்ணே! நேரமாகிறது.

"வெற்றிவாகை சூடி விரைவிலே திரும்புங்கள்! நீங்கள் திரும்பும்வரை என் உடலும் உயிரும் ஒன்றியிருக்குமோ? என்று சொல்லும் திறமைகூட எனக்கில்லை! நான் சொன்னதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள் அத்தான்! இனி நமக்கு எதிரிகளே இல்லையெனும் மகிழ்ச்சிச் செய்தியினைக்கேட்க என் செவிகள் துடிக்கின்றன!"

"வருகிறேன் விரைவில்!"

வீரன் போர்க்களம் நோக்கி விரைகிறான்! பாண்டிய நாட்டுப்படை பைந்தமிழ் பாடி நிற்கிறது. எதிரிகளும் அஞ்சாமல், போரிடத்தயார் என எக்காளமிடுகின்றனர்! சிறிது நேரத்தில் போர்! போர்! என ஒரே இரைச்சலுடன் இருதிறத்துப் படைகளும் மோதின! புறமுதுகிட்டு ஓடு! ஓடு! என, பாண்டியநாட்டுப்படை எதிரிகளை விரட்டிற்று! புயற்காற்றெனப் புழுதிக்காற்று வீசிற்று! ஒருநாள் இருநாள், பல நாட்கள் போர் இடைவிடாமல் நடந்தது! இறுதியில் பாண்டிய நாட்டுப்படை வெற்றிபெற்றது!

வீரர்கள் தங்கள் இல்லங்களை நோக்கி விரைந்தனர்! வீரனும் வெற்றிப் புன்னகையுடன் வீடு நோக்கி ஓடி வந்தான்! வாயிற்படியிலே காத்து நிற்கும் வஞ்சியைக் கட்டியணைத்தபடி உள்ளே சென்றான்! வீடுதோறும், - வீதிதோறும், வெற்றி விழா! உண்டனர்! உடுத்தனர்!

வீரனும், வஞ்சியும் அமர்ந்தனர்.

"போர்க்களத்துச் செய்திதனைக் கூறுங்களேன் அத்தான்!" என்றாள்.

கூறுகிறேன் கேள்! பாண்டிய நாட்டு வீரப் பெருமக்கள் இதுவரை காணாத இரத்தக் களத்தை இந்தமுறை கண்டுவிட்டனர்! போர்க்களத்தில் பாண்டியனை எதிர்த்துநின்ற அத்தனை மன்னர்களும் தலைகுனிந்தனர்! நம்முடைய குதிரைப் படைகள் எதிரிகளின் யானைப் படைகளோடு மோதி அவைகளைத் திணரடிக்க வைத்தன! அந்த வேழப்படைகளின் கழுத்தில் இருந்த கயிறுகள் அறுந்து விழும்படிச் செய்துவிட்டன நம்முடைய படைகள்! வேழப்படைமீது அமர்ந்து போரிட்ட அத்தனை மன்னர்களும் கீழேவிழுந்தனர்! அவர்கள் தலையிலேயிருந்த மணிமுடிகள் உருண்டன! அவைகளைக் காலால் உதைத்துக்கொண்டே முன்னேறிப் போயின நம்குதிரைப்படைகள்! இப்படி உதைத்துக்கொண்டே முன்னேறிய காரணத்தால் குதிரைகளின் கால்களெல்லாம் பொன்னை உரைத்துப் பார்க்கும் உரைகற்களைப் போன்று தோன்றின! இந்தக் காட்சியினைக் காணும்போது உன்நினைவுதான் எனக்குத் தோன்றியது! என்னென்று சொல்வேன் நம் படையின் வெற்றியை! பாண்டியநாடு பார்புகழும் பான்மையுடையதன்றோ?

வஞ்சி! ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே! என்னுடைய வாள், எதிரிகளின் வாள்களுடன் ஒவ்வொருமுறை மோதும்போதும் நீசொல்லியனுப்பிய அந்த வார்த்தைகள் ஒலித்தன! இனி நமக்கு எதிரிகளும் இல்லை! போர்க்களம் செல்லும் வேலையுமில்லை! ஆனால்...! ஒன்றுமட்டும் உண்டு!

"என்ன அத்தான்! அந்த ஒன்று?

சொல்கிறேன்! அருகில் வா! என்றான் வீரன். இருவர் முகமும் ஒன்று சேர்ந்தன 'இச்'சென்ற ஒலிதான் எழுந்தது அந்த இல்லத்தில்!

நிரைகதிர்வேல் மாறனை நேர்நின்றார் யானைப்
புரைசை யறநிமிர்ந்து பொங்கா — அரசர்தம்
முன்முன்னா வீழ்ந்தமுடிக ளுதைத்தமாப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு.

—முத்தொள்ளாயிரம்

அலை கடல் படுதுயர்!

பட்டுக்கோட்டை, மணிவண்ணன்.

கள்ளமில்லா உள்ளத்தில் கவிந்திருந்த துன்பங்
கரைந்திடுமோ என்றெண்ணிக் கவலைமிகக் கொண்டே
பள்ளமுள்ள இடம்நோக்கி ஓடுகின்ற நீரின்
பான்மையிலே காலிரண்டும் கடற்கரையை நோக்கி
விள்ளரிய விரைவினிலே நடந்திடவே சென்று
வெற்றிடமாய் நான்பார்த்தே அமர்ந்திடவே அந்த
வெள்ளத்தின் முழுப்பரப்போ அலைகளெனும் வாயால்
வெளியிட்ட பேரிரைச்சல் தனைக்கூர்ந்து கேட்டேன்!

''அன்றுமுதல் இன்றுவரை நானுள்ள தாலே
அறிந்திடுவேன் தமிழர்களின் நன்றான வாழ்வை
அன்றுபெரும் புகழோடு தங்களைத்தா மாண்டே
அவனிக்கோர் ஆசானுய்ப் பல்கலைகள் சொன்னர்;
இன்றைக்கோ தமிழரென வாழ்ந்திடுவோர் தம்மை
எண்ணிடிலோ, நெஞ்சமெலாம் நோகின்ற தையோ!
தென்றல்மிக நிறைந்திருந்த சோலைக்குள் இன்று
தீக்காற்றுப் படுவதனல் மலர்களெலாம் வேகும்!

போற்றுபுகழ்த் தமிழரையே பழித்திட்டார் என்று
போர்தொடுத்து வெற்றிகண்டு வடவரையே அன்று
தூற்றுமே எனும்படிக்குக் கல்சுமக்க வைத்தோர்
தூக்குகிறர் காவடியை வடவர்தமக் கின்றே,
சோற்றுலே நிரப்பியதோர் உடலமடா! சூடு
சொரணையுமே இல்லாது வாழ்வதுமோர் வாழ்வா?
வேற்றினத்தால் நம்கலைகள் பண்புமொழித் தன்மை
விரைவினிலே அழிந்துவிடும்; நம்குடும்பந் தன்னை

வேற்றுனின் தலைமையிலே நடத்துவதா என்று
விடுதலைக்கே உழைத்துவரும் வீரர்களைக் கண்டு,
'போற்றுபெரும் அமைப்பினிலே வாழ்ந்திடுவோம் வேண்டாம்
பிரிவினையே' என்றுசில மானமிலாத் தோழர்
நாற்றமிகு வாயாலே நரிபோலே கூச்சல்
நாணமின்றி எழுப்புகிறர்; வெட்கமடா வெட்கம்!''
காற்றுடே கடலெழுப்பும் ஓலமடா ஓலம்!
கரைதலின்றி என்துன்பம் நிரப்பிவந்து சேர்ந்தேன்!

★ ★ ★

பெரியார் அவர்கள் நடத்த இருக்கின்றபட எரிப்புப்போராட்டம் பற்றி மதுரையில் பாரதி விழாவில் பேசிய காமராஜர் குறிப்பிட்டு, அப்போராட்டத்தைநடத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டாராம்.

''தனிநாடு போராட்டம் என்று பல போராட்டங்களை உருவாக்கி வருகிறர்கள். இனி நமக்குள் போராட்டம் எதற்கு?''

'நாட்டின் வறுமையைப் போக்குவதுதான் முதல்பிரச்சினை'

''இந்தப் போராட்டங்கள் பிள்ளை பெறுவதற்கு முன்னேயே பெயர்வைப்பதுபோலிருக்கிறது.''

—இவை அமைச்சரின்பேச்சுக் கிடையில் உதிர்ந்த முத்துகளாம்.

பார்ப்பன மகன்

தலைவன் ஒருவன் 'சிந்தாமற் சிதறாமல் அழகையெல்லாம் குளிரேற்றி, ஒளியும் ஊட்டி' அமிழ்தில் குழைத்தெடுத்து, வடிவுசெய்ததை ஒத்த தித்திக்கும் தேன்தமிழ்க் காதலியைத் தொட்டுப் பிடித்து, எட்டிநின்று பற்றியிழுத்து, அருகணைத்து ஆரத்தழுவி, இதழ் சுவைத்து, இன்பத்தின் எல்லை காண விழைந்து, தேனுண்ட வண்டுபோல் அம் மான்போன்ற கண்ணிபால் மனதைத் தந்துவிட்டு, நெஞ்சத்தை மீளப்பெற வழியற்று வருந்தினான்.

உடலின் ஒவ்வொரு உறுப்பிலும் அன்பு பொங்கிப் பெருகி, அதிலே திளைத்து, படிந்து, தோய்ந்து அள்ளூறித் தித்திக்கப் பேசுகின்ற திந் தமிழ்க் காதலியைச் சந்திக்க வழிகாணாது திகைத்து, ஏங்கிய முகமும், நீங்கிய இதழுமாக, உயிரிலா நிலையும் உணர்விலா நோக்கும் கொண்டு சோகமே உருவெடுத்துச் சோர்ந்து அமர்ந்திருந்தான் அந்த அடலேறு.

அவன் தெருவிலே வாழும் பார்ப்பன மகன் ஒருவன் அவனுக்குஇளமை தொடங்கி இன்றுவரை தெரியும். "துன்பத்தின் கொடுமுடியில் தொங்கி நிற்க யாது காரணம்" என்ற கேள்விக் குறியுடன் வந்தான். வினைத்ததைக் கூறினான் தலைவன். சடுதியில் சந்திக்க நெஞ்சம் நீடு விழைகிறது. வழி காணேன் வருந்துகிறேன் என்றான்.

"அன்பாவது - காதலாவது வேண்டுமளவு விருந்திலே சுவைபட உண்டு ஒய்வுபட உறங்குதலை விடுத்து, காதல் - பிணைப்பு - அன்பு என்றெல்லாம் கூறுகிறாயே? இதுதகுமா?" என்றான் அந்தப்பார்ப் பனத் தோழன்.

காதலியை என்னென்ன முறையிலெல்லாம் கற்பனை செய்து காணமுடியுமோ அவ்வாறெல்லாம் கற்பித்து இனிய எண்ணத்திலே திளைத்துக் கிடந்த இவனுக்குப் பார்ப்பனனின் சொல் வெறுப்பையும் சினத்தையும் மூட்டியது வியப்பல்ல.

காய்ந்த இருப்புச் சட்டியில் இட்ட சோளம் பட்டுத் தெறிப்பதுபோல் அவனது வாயிலிருந்து சொற்கள் வெளிப்பட்டுக் கிளம்பின.

"பார்ப்பானே! பார்ப்பானே! கமண்டல மேந்தும் பார்ப்பானே! எந்நேரமும் விரதம் விரதம் என்றுகூறிக் கொழுக்க உண்டுதிரியும் பார்ப்பானே! காதலைப்பற்றி உனக்கென்ன தெரியும். தமிழ்ப் பண்பாடுற்றவரிடமல்லவா அதுபற்றிக் கேட்டல் வேண்டும். தமிழிலக்கியங்களில் நோக்குமிடமெல் லாம் நீக்கமற நிறைந்திருப்பது காதலும் வீரமும் தான்" என்றுகூறிக் "கூடிப்பிரிந்த கொம்பனையை மறுமுறையும் சேர்த்துவைக்க உனது வேதத்திலாவது ஏதாவது சொல்லியிருக்கிறதா பார்ப்பானே. இதற்குக்காதலியைச் சந்திப்பதுதான் மருந்தேதவிர வேறொன்றில்லை. நீ அறியாது கூறுகின்றாய் உன் மயக்கத்தை விட்டொழி" என்று கூறினான்.

இனிய வாசகர்களே! இவ்வாறு கூறுதல் என் கூற்றல்ல. இற்றைக்கு ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் செந்தமிழ் மொழியின் சீர்சால் இலக்கியங்களைக் கற்று, அதிலே படிந்து ஊறிப் பயிற்சி மிகப்பெற்ற பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார் என்பார் கூறிய கூற்று இது. அவர் கூறியகூற்றை அப்படி நீங்களும் காண விழைகின்றீர்கள். நான் தடுக்கவில்லை. இதோ காணுங்கள்:

பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கின் நன்னார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ உண்டிப் பார்ப்பன மகனே
எழுதாக் கற்பின் நின்சொல் உள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ மயலோ இதுவே.

(குறுந்தொகை 156)

பார்ப்பன மகனே என்னும் விளியை மும்முறை அடுக்கியது "நீ பேதை" என்னும் பொருள்பட. படிவஉண்டி = விரத உணவு எழுதாக் கற்பு=வேதம். ஆரியத்திற்கு எழுத்தில்லா யாதலின் எழுதாக்கற்பு எனப்பட்டது. (காதலின் இயல்பை அறியாதவன் ஆகலின் "படிவ உண்டிப் பார்ப்பன மகன்" என்றான்.)

இவ்வாறு பார்ப்பனனுக்குக் கூறிமுடித்த அள விலேநகையும்முகமும் காணயக்கைவீச்சும் கொண்ட சேயிழையாள் ஒருத்தி அன்னம் தன்னிடம் நடை பயில நடந்துவந்தாள். அவள்தலைவியின் தோழியாம் தன் காந்தள் விரலால் குவித்துப் பிடித்திருந்த ஓலையைத் தலைவனிடம் நீட்டினாள்.

சந்திக்குங்காலமும் இடனும்சுட்டிச், செம்பஞ்சுக் குழம்பிலே பித்திகை அரும்பைத் தொட்டுக், காதல் மணம்கமழ முத்துமுத்தாக அன்பிலே தோய்த்து எழுதி அனுப்பியிருந்தாள்; அந்தக் காதற் கனி மொழியாள்.

இன்ப எழிலைக் கூட்டிநிற்கும் நேரம் கூடிவந்தது காதலன் களிறானான்; காதலி கரும்பையொத்தாள், தலைவி தாமரை மலரானாள், தலைவன் ஒண்சிறை மணிவண்டொத்தான்.

பள்ளஉவர்க் கடலில் பாய்ந்தோடும் வெள்ள மென உள்ளம் உவந்தோடி ஒன்றானார்! இனி நான் என்ன கூற?

"கயல்விழி"

யார்? யார்?

★ புலவர், அ. மதி, திண்டிவனம். ★

சாதிபல காட்டிநமைச் சாய்த்தவனும் யார்யார்?
சாத்திரங்கள் காட்டிநமை ஏய்ப்பவனும் யார்யார்?
ஒன்றிறைவ னென்றவரை ஓட்டியவன் யார்யார்?
பன்றிவரை ஆண்டவனைக் காட்டியவன் யார்யார்?
சூத்திரனே என்றுதினம் தூற்றுபவன் யார்யார்?
சூழ்ச்சியினால் செந்தமிழைத் தீய்ப்பவனும் யார்யார்?
சாயாத ஆட்சிபல சாய்த்தவனும் யார்யார்?
சாட்சிசொலும் சாணக்கிய தந்திரியும் யார்யார்?
மாடோட்டி வந்தவரின் வர்க்கத்தார் யார்யார்?
பாடற்று வாழ்விலுயர் பீடுற்றார் யார்யார்?
காட்டியும் கொடுத்துயர்வு காண்பவனும் யார்யார்
காலமது போகும்நிலை மாறுபவன் யார்யார்?
செந்தமிழும்செத்தமொழிச்சேயென்பான் யார்யார்?
பகவனன்வள்ளுவரின் தந்தையென்பான்யார்யார்?
ஆரியரின் ஸ்ருதியினில் ஊறியவன் யார்யார்?
இராவணனைக் கொன்றமட இராமனவன் யார்யார்?
புத்தர்நெறி மாய்த்தவெறி போக்கிலிகள் யார்யார்?
சித்தர்நெறி பொய்க்கவழி போட்டவர்கள் யார்யார்?
விதிபெரிதாம் என்றறிவை வீழ்த்தியவர் யார்யார்?
மதிபெரிதாம் என்றவரை மாய்த்தவரும் யார்யார்?
கலைவளரும் நிலையதனை நீக்கியவர் யார்யார்?
கட்டிடுவீர் கோயில்பல என்றவரும் யார்யார்?
மனுவழியே குறளமுதம் என்பவரும் யார்யார்?
மறைகளே இதிகாசம் என்றவரும் யார்யார்?
இராமனவ னிறைவனென ஏய்ப்பவனும் யார்யார்?
புராணமெனும் நச்சரவைப்போற்றுபவன் யார்யார்?
அகிம்சைநெறி தமிழரிடை மாற்றியவன் யார்யார்?
யாகமுறை நம்மிடையில் ஊட்டியவன் யார் யார்?
தென்னவனே! முன்னவனே! யாரெனவே
[இன்றே
உன்னிடமே சொல்லிடவே வேண்டுமினி நன்றே?

சென்றஇதழ்த் தொடர்ச்சி:

கலைஞன் கண்ட வெற்றி

—: வித்துவான், பா. முத்து :—

கலையறியா மன்னனுக்கு நல்ல பாடம்
கற்பிக்க வேண்டுமென எண்ணி, மற்றோர்
விலையறியா ஓவியத்தைத் தீட்டி விட்டான்;
"வேந்தனுரு! பரியிவர்க்கும் உடையில்! உண்மைச்
சிலையறியா நுணுக்கமெல்லாம் அறியும் தோற்றம்!"
சென்றதனை வேந்தனிடம் நீட்ட, என்றும்
மலையறியான் மலைகண்ட தொத்தான் "இந்த
மனிதன்யார்?" எனக்கேட்டான் அறியான் போல;

"திருமிக்க பேரரசே! வணக்கம்! இங்குத்
திகழ்உருவைப் பலரறிய யாரென் றேயான்
தெரிவிக்க விரும்புகிறேன்; ஒப்பம் தாரீர்;
தெளிவாகப் பல்லோரும் உணர்தல் வேண்டும்;
தருமிக்குப் பொன்கொடுத்த கதையீ தல்ல!
தானேதன் கலைச்சிறப்பைக் கலைஞன் நல்ல
உருமிக்க ஓவியத்தால் தீட்டல்" என்றான்
உடன்பட்ட மன்னவனும் சரியென் றிட்டான்;

ஓவியத்தைக் கைபிடித்துக் கலைஞன், மன்னன்
ஊர்ந்திடுகல் குதிரையுள்ள இலாயம் சென்றான்;
மாவிருக்கும் அவ்விடத்தே மன்ன னோடு
மக்கள்பலர் சென்றார்கள்; கலைஞன் அந்த
ஆவியுள்ள வேந்தொக்கும் ஓவி யத்தை
அவன்ஊரும் பரியெதிரே வைத்தான்; மாவோ
மேவுமெழில் மன்னவனே எனநினைத்து
மிக்கொலியாய்க் கனைத்துடலம் தாழ்தல் கண்டார்!

மன்னுபுகழ்க் கலைவல்லான் மகிழ்ச்சி பொங்க
மன்னனையும் மக்களையும் வணங்கி நின்றே
"என்னருமைப் பெருமக்காள்! என்னுள்ளத்தே
எழுகின்ற நிலைசொல்வேன் கேளீர்! இந்த
மன்னவரே உணராஎன் கலையை மன்னர்
மாக்குதிரை உணர்த்தியது சிறப்பே!" என்றான்
மன்னவனோ தலைகுனிந்தான்; கலைச் சிறப்பை
மற்றவரோ புகழ்ந்துவிட்டு நகர்ந்து சென்றார்!

அழகின் வழக்கு

— மேட்டூர், கோலாகலன் —

அரும்பெனும் நிலைமாறி—நான்
அரும்பெனும் நிலைமாறி—முழுப்
பருவ மலராகப் பொலிந்திடும் வேளையில்
கனவை மிகவிரும்பும்—காதல்
நினைவை மிகவிரும்பும்—இளந்
தனமுள மங்கையர் தாழ்குழல் சேரலே
தகுந்த இடமெனவே—பெருமை
மிகுந்த இடமெனவே—பூவில்
புகுந்த சுரும்பொன்று புகன்றதே என்னிடம்!
கூந்தலின் பின்னிருந்து—கருங்
கூந்தலின் பின்னிருந்து—அந்த
மாந்தளிர் மேனிகொள் மங்கையும் நம்பியும்
பேசும் மொழியையெலாம்—மகிழ்ந்து
பேசும் மொழியையெலாம்—நான்
பேசாது கேட்டிட எண்ணினேன்! இன்றந்தோ...
கல்லுக்குச் சூட்டினரே—என்னைக்
கல்லுக்குச் சூட்டினரே—அந்தக்
'கல்லுக்குள் ளேசாமி குடியிருக் கும்என்று
கல்லுக்குச் சூட்டினரே—நீரைப்
புல்லுக்குக் காட்டினரே!—அந்தோ
புல்லரி டைநாங்கள் பூத்த அழகெல்லாம்
பலனற்றுப் போய்விடவோ—பாழாய்ப்
பலனற்றுப் போய்விடவோ—என்ற
மலர்எனும் அழகின்இவ் வழக்கினைக் கேட்டிரோ?

குயிலோசை கேட்குதம்மா!

பழனி- ''திருமாரிதன்''

எடுப்பு

குயிலோசை கேட்குதம்மா-தமிழ்க்
குடிப்புகழை மீட்குதம்மா! புதுவைக் (குயி)

தொடுப்பு

நாயினும் கீழாய் நந்தமிழர்-இங்கு
நலிந்திடப் பார்ப்பார் வாழ்குவதோ? என்று (குயி)

முடிப்பு

ஆயிரம் தலைகளைத் தருவோம்-நமது
ஆவியாம் உரிமையைப் பெறுவோம்!
தாயினைப் பழித்திடல் கண்டும்-அந்தோ
தலையிறக்கம் ஆமோ? விழி-தமிழா என்று (குயி)

துயில்வது போன்றதே இறப்பு-கண்ணைத்
துடைப்பது போன்றது பிறப்பு!
அயர்ந்தே இருந்தது போதும்-இன்றே
ஆர்த்தெழுவாய்நீயே! வரிப்புலியே! என்று (குயி)

ஞாயிற்றின் உதயமே பெரியார்- குள்ள
நரிகளின் கூட்டமோ அறியார்!
கோயிலைக் கலைவளர் கூடம்-ஆக்கிக்
கூத்திடுவோம்தோழா! கொதித்தெழுவாய்! என்று
(குயி)

புதுவையில் . . . ! விரைவில் . . . !

திரு. **சிவாஜி கணேசன்** அவர்கள்

தம் குழுவினருடன் நடிக்கும்

"கட்டபொம்மன்"

(உயரிய தமிழ் நாடகம்)

நடைபெறும் நன்னாளை எதிர்பாருங்கள் !

- முத்தமிழ் மன்றத்தார், புதுச்சேரி.

வந்தனர் என்றுசொல்!

பட்டுக்கோட்டை, இராசேந்திரன்.

புலவர் பலர்வேர்ப் பலவின் தமிழில்
செய்த பாக்களைப் பெய்த ஏடே
குறுந்தொகை; நமக்குப் பெரும்பெரும் கருத்தைச்
சுருக்கித் தந்தே பெருக்கும் மகிழ்வை.

அந்நூ லதனில் செந்தமிழ் வல்ல
'பாலை பாடிய பெருங்க டுங்கோ'
புனைந்த பாக்களும் இணைந்துள; அஃதில்,
வாழைப் பழத்தை நாலைந் தாகப்
பிளந்துதந் ததுபோல் விளங்கும் ஒன்றைச்
சுவைக்கத் தந்துளோம்; சுவைத்தே மகிழ்க!

காசுக் கென்றுபொன் பூசிய மேனித்
தோகையை விட்டு வாகாய் வேற்றூர்
சென்றான் தலைவன்; குன்று எழிலி
வருந்த மெல்லுடல் துரும்பென் றானதே!

"தலைவி யேஇவ் உலகில் உள்ள
பெண்கள் அன்பர் வெண்பொற் காசைச்
சேர்க்க வேற்றூர் சென்றனர் என்னில்
திரும்பி வருமுன் அரும்புந் துயரைச்
சுமைதாங் கியென அமையத் தாங்கிக்
கொள்ளுவர், அதுபோல் கொள்ளுதற் கென்ன?"
என்றாள் தோழி: தலைவி இயம்புவாள்,
"மழைமண் நோக்கி விழையக் காதில்
குண்டலந் தொங்கும் பெண்டிர் இருகயல்
கண்ணெனக் கொண்டவர் எண்ணெய் ஊற்றிய
விளக்கை ஏற்றி விளக்கத் தனிமைத்
துயரை மேலும் உயர்த்தும் இந்த
மூதுமா லைக்கண் 'மதுவே இதழாய்
ஒட்டுக துயரைக் கூட்டுக மகிழ்வை'
என்றனை தோழி! என்னுயிர் போல்வார்
வந்தனர் என்றஅவ் வின்பச் செய்தியைக்
கூறி என்றன் கூர்வேல் விழிகள்
பெருகும் மகிழ்வால் உகுக்குங் கண்ணீர்
துடைத்தே இன்பம் படைப்பவர் காணேன்".
மின்னிடைத் தோழி நின்றவள்
என்ன சொல்லுவ தென்றறி கிலளே!

[குறுந்தொகை—பாலைத்திணை, 398]

★ ★ ★

ஏனின்னும் வரவேயில்லை!

— 'தமிழன்பன்' —

நோக்கமெலாம் பொதுநலந்தான் என்று சாற்றித்
தன்னலத்தில் முழுவதுமாய் நுழைத்துக் கொண்டு
வாக்காளர் மனைதோறுந் தேர்தல் நாளில்
படியேறிப் பற்காட்டி வருவார் போலப்
பூக்கள்தாம் இருக்கின்ற இடங்கள் தோறும்
போய்மீளுஞ் சுரும்பினந்தாம் பாடக் கேட்டேன்!
ஏக்கமுற்றுக் கிடக்கின்றேன்! எனைய ணைக்க
எழிலரசி ஏனின்னும் வரவே யில்லை!

வேற்றுமொழி மோகத்தில் வீழ்ந்தார் பின்னர்
வேம்பெனவே அதைநீத்து நெஞ்சில் இன்பம்
ஏற்றுகின்ற தாய்மொழியைப் போற்றல் போல
வானத்தை நீத்துவிட்டுக் கதிரோன் அன்பு
சாற்றுகின்ற கடலணங்கை அணைத்து முத்தம்
முகமெங்கும் சிவப்பேறத் தந்தான்! தேனின்
ஊற்றாகும் ஒளியிதழைத் தந்தே கோதை
உவப்பளிக்க ஏனின்னும் வரவே யில்லை!

எதிர்க்கட்சி தனைச்சேர்ந்தங் கேற்றம் பெற்ற
எத்தன்தான் இருந்தகட்சி நிலையைக் கண்டே
குதித்தாடி மகிழ்தல்போல் தனக்கு வாய்த்த
கொழுகொம்பைத்தழுவிநின்றமுல்லைப் பெண்ணுன்
மதிமயங்கும் எனைநோக்கி முறுவ லித்தாள்!
மகிழ்ந்திட்டான் நிலவன்பன் அல்லி யன்பில்!
நதியணைத்த பெருங்குன்று களித்த தென்னுள்
நடஞ்செய்வாள் ஏனின்னும் வரவே யில்லை!

கள்ளமுறு நெஞ்சத்தான் காந்தி யாரின்
பெயர்சொல்லி வாழ்தல்போல் துயரைச் சால,
அள்ளிப்பேர் 'தண்தென்றல்' என்றே சொல்லி
அசைந்துவரும் வளிகாதல் தழலை ஊத
துள்ளுகின்ற கலையோடித் துணையைச் சேரும்
காட்சிநெஞ்சைத் துளைபோட! என்னை யேற்றுத்
தெள்ளுதமிழ்க் கவியின்பம் அளிப்பாள் நோக்கித்
தேய்கின்றேன்! ஏனின்னும் வரவே யில்லை!

சேரவாரும்...

இலக்கியம் தோன்றிய நாள்தொட்டு ஒவ்வொரு நாட்டிலும் அந்த நாட்டுப் பண்பாட்டிற்கும் மனவளத்திற்கும் ஏற்ப இலக்கியங்கள் மலர்ந்திருக்கின்றன. ஒவ்வொரு நாடும் தன் பண்பாட்டுப் பெருமைகளைக் கூறிப் பூரிக்கும் போதெல்லாம் அது பெற்ற மேதைகளை – அவர்கள் தந்த இலக்கியங்களைத்தான் முன் மாதிரியாக வைக்கின்றன. பரப்பளவும் நிலவளமும் கனிப்பொருளும் ஒரு நாட்டுக்குத் தேடித் தந்ததினும் அதிகமான செல்வாக்கை இலக்கியங்கள் தேடித்தந்திருக்கின்றன. ஒருநாட்டின் மக்கள் வாழ்வை, பண்பாட்டை மனப்பாங்கை உள்ளபடியே நேரடியாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் அவற்றை அந்த நாட்டு இலக்கியங்களில் இருந்து தெரிந்துகொள்ள முடியுமே தவிர, வெறும் வரலாற்றைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம் என்று நினைப்பது குருடர் நால்வர் கூடி யானை பார்த்த கதை போலத்தான் இருக்கும்.

ஏன்? வரலாறு நடந்துபோன செய்திகளை, அழிந்து போன பேரரசுகளை, மடிந்துபோன சமுதாயங்களை, மறைந்துபோன நாகரிகங்களைப் பற்றிய குறிப்புகளைத் தருகிறது. அதுவும் சரியாக இருக்கிறதே தவிர இருந்து மறைந்துபோன பேரரசுகளில் வாழ்ந்து மகிழ்ந்த மனிதர்களின் மனவளத்தைக் காட்டும் குறிப்புரைகள் வரலாற்றைப் பொறுத்தவரை முயற்கொம்பு!

இன்று நாம் இருந்து வாழ்கிற இந்தியத் துணைக்கண்டத்தின் தென்பகுதிச் சரித்திரம் இங்கே இருந்து மறைந்த சிற்றரசுகள் ஒன்றுக்கொன்று போரிட்டு மடிந்த புள்ளிவிவரங்களைத் தருகின்றதே தவிர அவர்களின் உயர்ந்த பண்பாட்டினை – செல்வச் செழிப்பைச் சுட்டிக்காட்டுகிற வேறு எந்தக் குறிப்பும் தருவதில்லை.

இந்தத் துணைக்கண்டத்து வரலாற்றின் முதற்பகுதி இந்தியாவின் பூர்வீகக்குடிகள் – திராவிடர்கள் என்பதிலிருந்து ஆரம்பமாகிறது. அடுத்த பகுதியும் ஆரியர் வருகை என்று தொடர்கிறது. மேலே போகப்போக ஆரிய பாரசீக மொகலாயப் படையெடுப்புகள் பற்றிய சேதிகள் வருகின்றன. ஆனால் கடல்கொண்ட கபாடபுரத்தைப் பற்றியோ, பன்மலையை, பஃறுளி ஆற்றைப் பற்றியோ எந்தக் குறிப்பும் இந்து தேச சரித்திரத்தில் காணக் கிடைப்பதில்லை. எனவேதான் நாம் புகழ்பெற்ற "மெசப்பட்டோமியா" நாகரிகத்துக்கும் மூத்தவர்கள் என்ற நிலை இருந்தும் நம் புகழ் குடத்தில் இட்ட விளக்காக இருக்கிறது.

நாம் நம்முடைய இழந்த புகழை மீட்க வேண்டில், உலக நாகரீகத்தின் தொட்டில் இந்தத் திருவிடம் என்பதை மெய்ப்பிக்க வேண்டில், நாம் வரலாற்றைக் கட்டியழுது பயனில்லை. நமது பழந்தமிழ் நூல்களில் நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் பெற வேண்டும்.

"பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்" என்று பேசுகிற திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே நம்மிடையே தோன்றியது. நாகரிகம் வளர்ந்திருக்கிற இன்றளவும் அதற்கொப்பான ஒரு நூல் உலகின் எந்த மொழியிலும் தோன்றியதில்லை. திருக்குறள் ஒன்றுபோதும் தமிழர்தம் பண்பாட்டுக்கு விளக்கங்கூற. எனவே தான் வரலாற்றின் புள்ளி விவரங்களைக் காட்டி எல்லைக் கோடுகளைத் திட்டுவதைவிட இலக்கிய வாழ்வை நமது பழம்பெரும் வாழ்வை எடுத்துக்கூறுவதன் மூலம் மக்களை விழிப்படையச் செய்ய முடியும்.

ஐவருக்கு மனைவியாக இருந்தும் அப்பாலே ஒருவன்மேல் – கர்ணன்மேல் ஆசைப்பட்ட திரௌபதியைப் பத்தினி என்று சொல்கிறது ஒரு கதை.

அறுபதினாயிரம் மனைவிகளுக்குக் கணவனாக இருந்தவன் – இராமாயணத்தின் பாட்டுடைத் தலைவனாகிய – இராமனின் தந்தை தசரதன் தேவனாகப் போற்றப்படுகிறான்.

இப்படிப்பட்ட கதைகளுக்குச் சொந்தக்காரர்களாய் இருந்தவர்களின் நாகரீகம், பண்பாடு, வாழ்க்கை எப்படிப்பட்டனவாய் இருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

ஆனால் சங்க இலக்கியங்களுள் மிகச்சிறந்ததாக வைத்தெண்ணப்படுகிற "நற்றிணை" "குறுந்தொகை" இரண்டிலும் ஒரே கருத்தமைந்த பாடல்கள் உள்ளன. தலைவி சொல்லுகிறாள் நான் சாவதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படவில்லை. ஆனால் அடுத்த பிறவியில் நான் அவரைப் பிரிந்துவிட நேருமெனில் அதுதான் எனக்கு உயிர் வருத்தமாக இருக்கிறது என்று; இது நற்றிணைத் தலைவியின் கருத்து. இனிக் குறுந்தொகைத் தலைவி கூறுவதைப் பார்ப்போம். அவள் சொல்கிறாள்.

வீரம் அன்றும்! இன்றும்!

சேலம், இராம. செல்வராசன்

பொன்னிப் பேராறு பெருமையுடன் இசை பாடித் தவழ்ந்து செல்லும் சோழ நாட்டிலிருந்து ஒவ்வொருதிக்கிலும் போர் முரசம் ஆர்ந்தது. காளையர்கள் வீறு கொண்டனர். நல்ல பேறு என மகிழ்ந்திருந்தனர். அழகு பொங்கும் காளை யொருவன் முரசு கேட்டு முத்தமிழில் இசைபாடி மகிழ்ந்தனன். தன் கொழுநன் மார்பகத்து மயங்கியிருந்த கிழத்தியும் ஓடிவந்து ஆரத்தி எடுத்தனள்–ஒய்யார நடை பயின்றனள். என் அருமை அன்ப! தாய் நாடு விளங்கத் தாரணி புகழ்பாட – சோழவள நாட்டின் புகழ்துலங்க வீறு கொண்டு எழுந்து பகையோட்டி விரைந்து வருக என விடையளித்தனள்.

கன்னியரும், துறவு பூண்டோரும் ஆவும் பணியாளரும் போக எஞ்சிய காளையரும், கை வலி யுடையவரும் பகை நாடிப் பாய்ந்தனர் கலிங்கம் நோக்கி! அதிர்ந்தது முரசம் – பொருதன கரிகள் – புரண்டன பரிகள்! ஆரத்தி பெற்று ஆர்ந்தெழுந்த நம்பியும் நகையொடு பொருதான். அம்பு பறந்தது -ஆண்டொருவன் வீழ்ந்தான்! ஆண்மை எழுந்தது- எழுவர் வீழ்ந்தனர்! கண்டோர் வியந்தனர் – கட்டழகன் சலியாது போர் செய்தான்.

அந்தோ! பரிமீது பாய்ந்து வந்தான் ஒருவன் அவன் மார்பகத்து வாள்பாய்ச்சி விரைந்தான். இன்னொருவன் வந்தான் – உடலைத் துண்டமாக்கி மறைந்தான். மெல்லியலாள் மெய் மறந்து துயின்ற அவன் நெஞ்சு குருதிகொட்டிக் குமுறியது – ஆனாலும் அவன் அரை உடலும் துயில் பெறவில்லை அவ்வுடலும் மாற்றான் மார்பகத்து வாள்பாய்ச்சியது - துண்டான உடலம் ஈனர்களைத் துண்ட மாக்கியது – பின் வீழ்ந்தது! என்னே வீரம்! என்னே வீரம்! கணவன் கை வலி கேட்டு மகிழ்ந்தாள் காதலி.

ஒருதுணி கருதுமி லக்கைய ழித்தன
  உருவிய பிறைமுக வம்பக ழித்தலை
அரிதரி திதுவுமெ னப்பரி யுய்ப்பவர்
  அடியொடு முடிகடு ணித்துவி ழுத்துமே.
அடியொடு முடிகடு ணித்துவி ழப்பகும்
  அளவரி தொடை சமரத்தொட ணைத்தனர்
நெடியன சிலசர மப்படி பெற்றவர்
  நிறைசர நிமிரவி டத்துணி யுற்றவே.

(க. பரணி)

அன்றெழுந்த வீரம் இன்றும் நிலைத்துத்தான் இருக்கிறது. இன்னும் அத்தகைய வீரமாண்பு மிகு தமிழர் நிலைத்துத்தானுள்ளனர். நாட்டிலே பல காளையர்கள் – உடலெங்கும் உறுதி கொண்டோர் – உள்ளத்தும் உறுதி கொண்டோர் இருக்கிறார்கள்; ஆனால் அவற்றை வேறு வழியில் செலவிட்டுக் கொண்டு! களத்திலே குருதி கொட்டக் கையிலே வாளேந்தினான் அன்று; வீரத்தை யெல்லாம் தன்னம்பிக்கை யில்லாத காரணத்தால் இழந்து பார்ப்பன அடிமையானான் இன்று. பகைவனை முற்றுகை இட்டான் அன்று; படக்காட்சிக் கொட்டகையை முற்றுகை இடுகிறான் இன்று. சொந்த புத்திக் கொண்டிருந்தான் அன்று; சொல்லறிவும் இழந்தான் இன்று.

நாட்டின் நிலை என்ன? குழப்பம் – சாதிச் சண்டை – ஆரியர் அட்டகாசம் – அடிமைத்தனம். இவற்றைப் போக்க வல்லவா எழ வேண்டும் தமிழன்! தமிழர்களே! தன்மான உர்ச்சியில்லையா? வீரர் வழியில் வந்தவர்களே! வலிமை எங்கே! வேதாந்தம் பேசும் கூட்டத்தை நம்பாதீர்கள் – சிந்தியுங்கள் – சீர்கெட்ட தமிழ் நாட்டினைச் சீர்திருத்துங்கள்.

அழியாத வீரம் அன்றோ!
அடிமை யானதும் நன்றோ?
அறவழியில் செல்வ தென்றோ?

"இப்பிறவியல்ல இன்னும் எத்தனை பிறவி வந்தாலும் நீதான் என் கணவன் - நான்தான் உன் தலைவி" - என்று.

"சாதல் அஞ்சேன் — அஞ்சுவல் சாவில்
பிறப்பு பிறிதாகுவ தாயின்
மறக்குவென் கொல்என் காதலன் எனவே"

(— நற்றிணை)

"இம்மை மாறி மறுமை ஆகினும்
நீயாகியரெங் கணவனை:
யானாகிய நின் நெஞ்சு நேர்பவளே"

(— குறுந்தொகை)

இப்படிப்பட்ட தொன்மையான தூய காதல் வாழ்வு வாழ்ந்தவர்கள் உமிழத்தக்க நாகரீகம் உடையவர்களின் கீழ் அடிபெருடிக் கிடப்பதா? அவர்கள் கதையைக் காவியம் என்றும், இலக்கியம் என்றும் போற்றிப் புகழ்வதா? நல்லவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இது ஒரு கட்சிப் பிரச்சினையல்ல, ஒரு பெரிய சமுதாயத்தின் உயிர்ப் பிரச்சினை. எனவே நம் பண்டைப் பெருமைகள் கூறும் இலக்கியச் செல்வங்களைப் பேணி வளர்க்கவும் அவை கூறும் பாதையில் நடக்கவும் திராவிடப் பெருங்குடி மக்கள் விழித்தெழவேண்டும். அப்போதுதான் தமிழ் வாழும் - நாமும் வாழ்வோம்! தமிழை மறந்து நாம் மட்டும் வாழ்ந்தால் பயன் உண்டா?

—மான்

குயில்

Regd. No. M. 7030

குடும்பத்தோடு புறப்படு!

வீட்டைப் பூட்டிக் குடும்பத் தோடு
நாட்டை மீட்க இன்றே ஓடு!
காட்டியதாம் கைவரிசை தில்லி!—அதை
சீட்டுக் கிழிந்து போனதென்று சொல்லி (வீட்)

ஆட்டுவாராம் அடக்குவாராம்
அழிப்பாரம் ஒழிப்பாராம்
ஓட்டுவாராம் நம்மைஅவ் வடக்கர்—மேலும்
தீட்டுவாராம் கத்தியை அவ்வி டக்கர் (வீட்)

வெற்றி பெற்றால் மீள்வ தென்று
வீழ்ச்சி யுற்றால் சாவ தென்று
நற்றமிழன் னைக்குறுதி கூறு!—அட
நாம்தமிழர்! நாம்தமிழர்!! ஏறு! (வீட்)

செந்தமிழைக் கொல்லச் சொல்லி
சீரகத்தை அழிக்கச் சொல்லி
இந்தியினைக் கற்கச்சொல்லி சொல்லி—ஒரு
மந்தியாட்டம் ஆடியதாம் தில்லி (வீட்)

தாய்க்கரிசி இல்லை என்பார்
தமிழர்க்கெலாம் தொல்லை என்பார்
வாய்க்கரிசி போட்டுக்கொண்டு முந்து—நல்ல
போர்ப்பரிசு நீ பெற நினைந்து! (வீட்)

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: **பாரதிதாசன்** புதுச்சேரி.

அச்சிடுவோர் : **மா. தண்டபாணி**, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.